பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

13 09 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மணிப்பூர் மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வடகிழக்கு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கான நிதி, ஐந்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவின் நம்பகமான வர்த்தக கூட்டாளியாக ஐரோப்பிய நாடுகள் திகழ்வதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. நேபாள நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து. அந்நாட்டின் இடைக்கால பிரதமராக திருமதி. Sushila Karki பதவியேற்றார்.

5. சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - திவ்யா தேஷ்முக் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மிஸோரம், மணிப்பூர், அஸ்ஸாம் மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

இதையொட்டி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மணிப்பூர் மாநிலத்தில் சாலை மேம்பாட்டு திட்டங்கள், தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள், மகளிர் விடுதிகள் ஆகியவற்றுக்கு இன்று தாம் அடிக்கல் நாட்டவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தலைமைச்செயலகம், தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம், மாநில காவல்துறை தலைமை அலுவலகம், மகளிருக்கான பிரத்யேக சந்தை ஆகியவற்றை தாம் திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிஸோரம் மாநிலத்தில் Bairabi Sarirang புதிய ரயில் பாதை வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும், முதல்முறையாக அம்மாநில தலைநகர் ஐஸ்வால், நாட்டின் பிற பகுதி ரயில்பாதைகளுடன் இணைக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

சவால் மிகுந்த நிலப்பரப்பில் இந்த ரயில்பாதை அமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்தப் புதிய பாதையில் மிஸோரம் மாநிலத்தில் வர்த்தகம் மற்றும் சுற்றுலா அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர், இன்று மாலை அஸ்ஸாம் செல்லும் பிரதமர், குவஹாத்தியில் நடைபெறவுள்ள பிரபல பாடகரும், கவிஞருமான மறைந்த Bhupen Hazarika நூற்றாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

நாளை, அஸ்ஸாம் மாநிலத்தில் 18 ஆயிரத்து 530 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

Darrang என்னுமிடத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள பிரதமர், Golaghat-ல் உயிரி எரிபொருள் தயாரிக்கும் ஆலையையும் திறந்து வைக்கிறார்.

நாளை மறுநாள், கொல்கத்தாவில் முப்படை அதிகாரிகள் பங்கேற்கும் மாநாடு ஒன்றையும் தொடங்கி வைக்கவுள்ள பிரதமர், மாலையில் பீகார் மாநிலம் சென்று, பூர்ணியா விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முனையத்தையும் திறந்து வைக்கிறார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் வடகிழக்கு பகுதிக்கான ரயில்வே நிதி, ஐந்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

Aizawl-ல் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மிஸோரமில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கவுள்ள Bairavi – Sairang ரயில்பாதை அம்மாநில வரலாற்றில் ஒரு மைல்கல் என்று கூறினார்.

இந்த பாதை முதல்முறையாக மிஸோரம் மாநில தலைநகர் Aizawl-ஐ நாட்டின் பிற பகுதி ரயில் பாதைகளுடன் இணைக்கிறது என்று தெரிவித்தார்.

45 சுரங்கப்பாதைகள் மற்றும் 55 பாலங்கள் இந்தப் பாதை வழியாக அமைக்கப்பட்டுள்ளது என்றும், கடினமான மலைப்பாதையில் இத்திட்டம் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ரயில்பாதையால் மிஸோரம் மாநில மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும் என்றும் அவர் கூறினார்.

இந்த ரயில் பாதை தொடக்க விழாவில், மூன்று விரைவு ரயில்களையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவின் நம்பகமான வர்த்தக கூட்டாளியாக ஐரோப்பிய நாடுகள் திகழ்வதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தியா – ஐரோப்பிய ஒன்றியத்தின் தாராள வர்த்தக ஒப்பந்தம் குறித்த அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்நாடுகளுடனான வர்த்தகத்தை விரிவாக்க இந்தியா விரும்புகிறது என்று கூறினார்.

இத்தகைய விரிவாக்கம், உலக அளவில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

வர்த்தகத்தில் இந்தியாவும், ஐரோப்பிய நாடுகளும் தங்களது தேவைகளை சரியான திசையில் நிறைவேற்றிக் கொள்வதாகவும், ஒன்றுக்கொன்று போட்டியிடுவதில்லை என்றும் திரு. பியூஷ் கோல் கூறினார்.

>>>>><<<<<

கர்நாடக மாநிலம், Hassan மாவட்டத்தில் நேற்று நிகழ்ந்த சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

விநாயகர் சிலையை கரைக்க ஒரு லாரியில் 20க்கும் மேற்பட்டோர் சென்றபோது, அந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து, விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதில் சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் 4 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா, உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

நேபாள நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து. அந்நாட்டின் இடைக்கால பிரதமராக திருமதி. Sushila Karki பதவியேற்றார்.

அவருக்கு அந்நாட்டின் ஜனாதிபதி திரு. Ramchandra Paudel பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

நேபாளத்தின் முதலாவது பெண் தலைமை நீதிபதியான 73 வயதாகும் திருமதி. Sushila Karki, தற்போது அந்நாட்டின் முதலாவது பெண் பிரதமராகவும் பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில், நேபாள நாடாளுமன்றத்திற்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவரை அரசு நிர்வாகத்தை நடத்துவதற்காக, அமைச்சர்களை இடைக்கால பிரதமர் நியமிப்பார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, நேபாளத்தில் இடைக்கால அரசு பதவியேற்றுள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது.

அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்து அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட இது உதவும் என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

நேபாளத்தின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று அந்நாட்டுடன் தொடர்ந்து நட்புறவை பேணி காக்கும் என்றும் வெளியுறவுத்துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் உட்பட 65 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் விமானப் படையினரும், ராணுவத்தினரும் ஒரே நேரத்தில் இந்த தாக்குதலை நடத்தியதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

காஸா நகரில் மட்டும் 48 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களை மீறி, இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும், இது கடும் கண்டனத்திற்குரியது என்றும் ஹமாஸ் அமைப்பு கூறியுள்ளது.

காஸா நகரின் அருகில் உள்ள Daraj பகுதியில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒரு குழந்தை உயிரிழந்தது. ஏராளமானோர் காயமடைந்தனர்.

500 இலக்குகளை குறிவைத்து, நேற்று தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ரஷ்யாவிடமிருந்து, எண்ணெய் வாங்கி வருவதால் இந்தியா மீது அதிக வரிகளை விதிக்கும் தனது முடிவு இருநாடுகளுடனான உறவை பாதித்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து, தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், தற்போதுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண இருநாடுகளுக்கு இடையே வர்த்தக பேச்சுக்கள் தொடங்கியுள்ளதாகவும், அது நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்திய பொருட்கள் மீது 50 சதவீத வரி விதிக்கபட்டிருப்பதால் அது இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்திலும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாவும் அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறினார்.

>>>>><<<<<

உஸ்பெயிஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - திவ்யா தேஷ்முக் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இந்த ஆட்டம், சுமார் 6 மணி நேரம் நீடித்தது.

>>>>><<<<<

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Jaismine, Nupur ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Jaismine, வெனிசுலாவின் Carolina-வை வென்றார்.

80 கிலோ எடைப்பிரிவில் Nupur, துருக்கியின் Duztas Seyma-வை வென்றார்.

>>>>><<<<<

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி, துபாயில் இன்றிரவு 8 மணிக்கு தொடங்கவுள்ளது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் 93 ரன் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

முதலில் விளையாடிய பாகிஸ்தான், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 160 ரன் எடுத்தது.

161 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஓமன் அணி, 16 புள்ளி நான்கு ஓவரில் 67 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>END<<<<<